மூடப்பட்ட அமைப்பை திறக்கும் பணி (Breaking Containment)

எப்போது முடிக்க வேண்டும் - எந்தவொரு மூடப்பட்ட அமைப்பை திறக்கும் பணி தொடங்குவதற்கு முன்

வேலையைத் தொடங்குவதற்கு முன் கீழே உள்ள ஒவ்வொரு கட்டுப்பாடு / பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவும்	ஒவ்வொரு கட்டுப்பாடு / பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்	பணியைச் செய்யும் நபர்(கள்)	வேலை தொடக்க சரிபார்ப்பாளர்
நான் உறுதிப்படுத்தியுள்ளேன்:			
1 **உபகரணத்திற்கு (Equipment) ஆற்றல் மூலங்களை தனிமைப்படுத்தல் (Energy Isolation) தேவையா என்பது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.** **இந்த உபகரணத்திற்கு ஆற்றல் மூலங்களை தனிமைப்படுத்தல் (Energy Isolation) தேவையா?** **□ ஆம் □ இல்லை** **ஆம் என்றால்: ஆற்றல் மூலங்களை தனிமைப்படுத்தல் வேலை தொடக்க சரிபார்ப்பு பூர்த்தி செய்யவும்.** **இல்லை என்றால்: அடுத்த 2 கட்டத்திற்குச் செல்லவும்.**	• அங்கீகரிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் நடைமுறை (Isolation Procedure) தயாராக உள்ளது மற்றும் தகுதி பெற்ற நபரால் சரிபார்க்கப்பட்டுள்ளது. • அபாயம் ஏற்படுத்தக்கூடிய அனைத்து ஆற்றல் மூலங்களும் கண்டறியப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டு, திட்டத்தின்படி பூட்டு (Lock) மற்றும் குறிச்சொல் (Tag) பொருத்தப்பட்டுள்ளன. • சக்தி எதுவும் இல்லாத நிலை (Zero Energy State) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. • அபாயகரமான பொருட்கள் அல்லது வாயுக்களை அகற்ற, அமைப்பு (System) காலி செய்யப்பட்டு(Drained), சுத்தம் செய்யப்பட்டு (Flushed) அல்லது வாயு நீக்கம் (Purged) செய்யப்பட்டுள்ளன.		
2 **ஆபத்துகள் கண்டறியப்பட்டு, பணிக்குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டு, தேவையான கட்டுப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**	• வேலை அனுமதி (Work Authorization) மற்றும் ஆபத்து மதிப்பீடு (Hazard Analysis) முடிக்கப்பட்டு, தொடர்புடைய பொறுப்பாளர்களால் பரிசீலிக்கப்பட்டுள்ளன. • வேலை தொடங்குவதற்கு முன், பணிக்குழுவினருடன் ஆபத்துகள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளன. • உபகரணத்தில் உள்ள பொருள் என்ன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. • வேலையை நிறுத்த வேண்டிய சூழ்நிலைகள் (Stop Work Triggers) அடையாளம் காணப்பட்டுள்ளன. • ஒரே நேர பணிகள் (SIMOPS) தொடர்பான ஆபத்துகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.		
3 **அடைப்பு திறக்கும் பணி நடைபெறும் இடம் பாதுகாப்பாக தயார் செய்யப்பட்டு, வேலை தொடங்குவதற்கு ஏற்ற நிலையில் உள்ளது.**	• அடைப்பு திறக்கும் பணி (Breaking Containment) நடைபெறும் இடம், சரியான அடையாளக் குறியுடன் (Location Identifier) குறிக்கப்பட்டு, தகுதி பெற்ற நபரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. • தேர்வு செய்யப்பட்ட கருவிகள், இந்த பணிக்கு ஏற்றதா என்பதை மதிப்பீடு செய்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. • கசிவு அல்லது சிந்தலை கட்டுப்படுத்தும் பகுதி (Containment Area) ஏற்பாடு செய்யப்பட்டு, எதிர்பார்க்கப்படும் அளவை தாங்கக்கூடியதாக உள்ளது. தேவையான இடங்களில் மழைநீர் வடிகால்கள் (Storm Drains) மூடப்பட்டுள்ளன. • ஆபத்து ஏற்படக்கூடிய திசை (Line of Fire) குறித்து விவாதிக்கப்பட்டு, தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. • வேலை நடைபெறும் இடத்தில் உள்ள மூடுபொருள் (Covering), காப்பு அடுக்கு (Insulation) மற்றும் வெப்பமூட்டும் அமைப்பு (Heat Tracing) அகற்றப்பட்டுள்ளன.		

வேலை தொடங்கும் முன் சரிபார்ப்பு - SWC

4	**தடுப்பு பகுதிகள் (Restricted Zones) மற்றும் தேவையான பாதுகாப்பு தடுப்புகள் (Barriers) அமைக்கப்பட்டுள்ளன.**	• தடுப்பு பகுதிகளுக்கான நுழைவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது (எ.கா., கண்காணிப்பாளர் (Attendant) அல்லது உடல் தடுப்புகள் (Physical Barriers) மூலம்). • அவசர நேரத்தில் வெளியேறும் வழிகள் (Escape Routes) எந்த தடையும் இல்லாமல் உள்ளன மற்றும் அவை பணிக்குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.		
5	**வாயு பரிசோதனை (Gas Testing) மேற்கொள்ளப்பட்டுள்ளது.**	• வேலை நடைபெறும் பகுதி மற்றும்/அல்லது உபகரணங்களில் வாயு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. • பணியாளர்கள் தனிப்பட்ட வாயு கண்காணிப்பு கருவிகளை (Personal Gas Monitor) அணிந்துள்ளனர். • பகுதி வாயு கண்காணிப்பு கருவிகள் (Area Gas Monitors) அமைக்கப்பட்டுள்ளன. • உபகரணத்தை திறப்பதற்கு முன், வாயு பரிசோதனை முடிவுகள் அனுமதிக்கப்பட்ட பாதுகாப்பு வரம்பிற்குள் உள்ளனவா என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.		
6	**தேவையான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (PPE) அடையாளம் காணப்பட்டு, பயன்படுத்த தயாராக உள்ளன.**	• இரசாயன தாக்கம் (Chemical Exposure), சுவாச ஆபத்து (Inhalation Hazard), செயல்முறை திரவங்கள் (Process Fluids) மற்றும் அபாயகரமான பொருட்கள் (Hazardous Substances) போன்ற ஆபத்துகளிலிருந்து பாதுகாக்க தேவையான PPE-கள் தயார் நிலையில் உள்ளன.		
7	**முதல் திறப்பு (First Line Break) பணிக்கான தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**	• முதல் திறப்பு பணிக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பணியாளர்கள் அறிந்துள்ளனர். • தகுதி பெற்ற நபர் (Competent Person) கண்காணிப்பிற்கு நியமிக்கப்பட்டுள்ளார். • பணியாளருக்கு எதிர்ப்புறமாகவும் கீழ்ப்புறமாகவும் உள்ள போல்ட்களை (Bolts) தளர்த்தி, Flange-ஐ மெதுவாக திறக்க வேண்டும். • அடைப்பு (Seal) முழுமையாக திறக்கும் வரை, Flange / Blind-இல் உள்ள நட்கள் (Nuts) அகற்றப்படாமல் இருக்க வேண்டும். • தேவைப்பட்டால், எதிர்பாராத நகர்வைத் தடுக்க கூடுதல் ஆதரவு மற்றும் கட்டுப்பாட்டு ஏற்பாடுகள் (Supports & Restraints) செய்யப்பட்டுள்ளன.		

இந்த கட்டுப்பாடுகள் / பாதுகாப்புகள் நடைமுறையில் உள்ளனவா மற்றும் வேலையைத் தொடங்குவதற்கு முன்பு சரிபார்க்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தவும். ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் நிறுத்தி உதவியை நாடுங்கள்.

	அச்சிடப்பட்ட பெயர் மற்றும் பொறுப்பு	கையொப்பம்	தேதி
வேலை தொடக்க சரிபார்ப்பாளர்			

